Registered as a Newspaper

கம்பியூட்டர் முறையில்
வர்ண புகைப்படங்களை
துரித கதியில்,
குறைந்த செலவில்,
நிறைந்த சேவையில்;
பெற்றுக்கொள்ள
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T'Phone: 23628

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

அழைக்கிறது—
ஆர்த்தி
எழில் மிகு காட்சிகளை
தத்ரூபமாகத் தந்திடும்
வர்ண
புகைப்படக் கருள்களைப்
பெற்றுக் கொள்ள
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T'Phone: 23628

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞூ பங்குனி மீ 20 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 21 (02 04-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:116

## தரை மார்க்கமாக வந்து—

# பற்றைகளில் பதுங்கி நின்று படையினர் சூடு!

### மயிலிட்டி, கட்டுவன் பகுதிகளில் நேற்று 2 பேர் மரணம் 4 பேர்காயம்

— பலாலிச் செய்தியாளர் —

பலாலி, ஏப். 2

பலாலி விமான நிலையத்தை அண்டியுள்ள மயிலிட்டி, கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் தரை மார்க்கமாக வந்த ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்பகுதிகளில் உள்ள வயல்களில் பயிர்களுக்கு மத்தியிலும், பற்றைகளிலும் பதுங்கி, மறைந்து இருந்தவாறு அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

நேற்றைய துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களில் இருவர் மரணமானுர்கள். நால்வர் காயம் அடைந்தனர்.

பலாலி முகாமிலிருந்து வீசப்பட்ட ஷெல் குண்டுகளால் பல குடிசைகள் தீப்பிடித்து எரிந்தன. வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்தன. பயிர்களும் நாசமாகின.

இந்தச் சம்பவம் பற்றி சொல்லப்படுவதாவது:-

நேற்றுக் காலை 7.30 மணிக்கு பலாலி விமான நிலையத்துக்கு தென்பகுதியிலுள்ள குரும்பசிட்டிப் பகுதிக்குள்ளும், மேற்குப் பகுதியிலுள்ள கட்டுவன், மயிலிட்டிக் கிராமப் பகுதிக்குள்ளும் கறுப்புச் சட்டை அணிந்த சிலருடன் நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் தவழ்ந்தும், குனிந்து பதுங்கியவாறும் முன்னேறினர்.

அப் பகுதிகளிலுள்ள தோட்டங்களுக்குள் உள்ள பயிர்களுக்குள்ளும் பற்றைகளுக்குள்ளும் அவர்கள் நின்றும் படுத்தும் பதுங்கி இருந்தனர்.

அப்பகுதியால் சென்றவர்கள் மீது அடுத்தடுத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

கடந்த சில நாட்களாக அப்பகுதிகளில் நடந்து முடிந்த அனர்த்தங்களால் மக்கள் நடமாட்டம் அப்பகுதிகளில் மிகக் குறைந்திருந்தது எனினும் அவசர தேவைக்காக அப் பகுதிகளுக்குச் சென்றவர்கள் நேற்று துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கானுர்கள்.

செல்லப்பா இராசா (வயது 48) என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வயிறு கிழிந்த நிலையில் விழுந்து கிடந்தார். சில மணி நேரங்களுக்குப் பின்னர் இளைஞர்கள் சிலரின் முயற்சியால் அவர் ஆஸ்பத்திரிக்குத் தூக்கி வரப்பட்டார். எனினும் அவர் வழியில் மரணமானுர்.

இவர் ஒரு விவசாயி.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## போகும்படி கூறிவிட்டு சுட்டனர்

### காயமடைந்தவர் தகவல்

பலாலி, ஏப் 2

மிளகாய் பாத்திக்குள் படுத்திருந்த சிப்பாய்கள் இருவர் என்னை விசாரித்து போகும்படி கூறினர். நான் சைக்கிளில் ஏறி திரும்பவும் புறப்பட்டபோது பற்றைக்குள் படுத்திருந்த மற்றொரு சிப்பாய் என்னை நோக்கிச் சுட்டான்.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள கந்தப்பிள்ளை கணேசமூர்த்தி(வயது30) என்பவர் உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு கூறினர்.

கந்தப்பிள்ளை கணேசமூர்த்தி மேலும் தெரிவித்ததாவது:-

கட்டுவனிலுள்ள லொறி ஒன்றை ஓட்டும் சாரதி வேலை செய்து வந்தேன். வழமைபோல் இன்று (செவ்வாய்) காலையும் 7.30 மணியளவில் எனது சைக்கிளில் கட்டுவனை நோக்கி மயிலிட்டி-கட்டுவன் வீதியால் சென்று கொண்டிருந்தேன்.

மயிலிட்டி மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகத்துக்கு அண்மையிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக வந்து கொண்டிருந்தேன். அப்போது மிளகாய்ப்பாத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நயினாதீவில் குண்டு வெடிப்பு

### கைவிடப்பட்ட பௌத்த கோயில் கட்டடம் சேதமாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

நயினாதீவுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பலத்த சத்தத்துடன் குண்டுகள் வெடித்தன என்று அறியப்படுகிறது.

இக் குண்டு வெடிப்புச் சத்தம் குறிக்கட்டுவான், புங்குடுதீவு, அனலைதீவு பகுதிகளுக்கும் கேட்டதாகக் கூறப்படுகிறது.

நேற்று நயினாதீவிலிருந்து எந்தப் படகுச் சேவைகளும் நடைபெறவில்லை.

நயினாதீவில் ஒழுங்கை ஒன்றில் இருந்த கைவிடப்பட்ட பழைய பௌத்த கோயில் ஒன்றின் கட்டடமே குண்டு வைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று தடைப்பட்ட படகுச் சேவை இன்று (புதன்கிழமை) தொடக்கம் வழமைக்குத் திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பருத்தித்துறையில் நேரடி மோதல்! ஷெல் தாக்குதல்!!

பருத்தித்துறை, ஏப். 2

பருத்தித்துறையில் நேற்றுக் காலை 7.20 மணியளவில் சிப்பாய்களுக்கும் போராளிகளுக்குமிடையே நேரடி மோதல் ஏற்பட்டது. இச்சமரில் போராளிகள் தரப்பில் ஒருவர் துப்பாக்கி வேட்டுக்குப் பலியானுர்.

போராளிகள் திருப்பித் தாக்கியதில் சிப்பாய்கள் தரப்பில் இருவர் படுகாயமுற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதனை அடுத்து சிப்பாய்களும் கறுப்புச் சட்டைக்காரர்களும் முகாமுக்குத் திரும்பினர்கள்.

அங்கிருந்து ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன.

இத்தாக்குதல்களில் நான்கு குழந்தைகளின் தகப்பனும் பருத்தித்துறை நகரசபை வரி சேகரிப்பாளருமான திரு. வை. சிவசுப்பிரமணியம் (வயது 50) பலத்த காயத்துக்குள்ளானுர்.

இவர் காலை 7.30 மணியளவில் பருத்தித்துறை சிவன் கோயில் முன்றலில் வழிபட்டுக் கொண்டிருந்தார்.

அச்சமயம் சிவன் கோயில் (தேர்முட்டி) சித்திரத் தேருக்கு முன்பாக விழுந்த ஷெல்லினுலேயே அவர் காயமுற்றுர். ஷெல் தாக்குதல்களால் கடற்கரை வீதியிலிருந்த பல வீடுகள் சேதமுற்றன. பிரதான பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

4 ஆம் பக்கம் பார்க்க)



சுபநேரம்
02 04 1986
புதன்கிழமை
சுபநேரம்:
4.41 முதல் 6 41 வரை
ராகுகாலம்:
12.11 முதல் 1 41 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
அட்டமி
பி. ப. 3 59 வரை

யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் யாழ் மின்சார நிலைய வீதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்னுல் அமர்ந்து மது வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தியபோது எடுக்கப்பட்ட படம்.

## இன்னும் முடிவில்லை

புதுடில்லி, ஏப் 1

திரு. பண்டாரி இலங்கை செல்வது குறித்து திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை

ஓய்வு பெற்ற திரு பண்டாரியே இதனைத் தெரிவித்தார்.

இதனிடையில், திரு. பண்டாரி இலங்கைக்கு ஏப்ரல் 20 ஆம் திகதி விஜயம் மேற்கொள்ளலாம் என்று வெளிவந்த செய்திகள் வெறும் ஊகங்கள் தான் என்று இந்திய அரசு அதிகாரிகள் கூறினர்.

## அடையாள வேலை நிறுத்தம்

கொழும்பு, ஏப். 2

தாதிகள் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக சுகாதார சேவையைச் சேர்ந்த 21 தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள் நேற்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனுல் கொழும்பு ஆஸ்பத்திரிகளில் வைத்திய சேவைகள் முற்றாக ஸ்தம்பித்தன.

## 25 பேரே கைது

திருகோணமலை, ஏப் 2

பெப்ரவரி 15 முதல் மார்ச் 31 வரை திருகோணமலை மாவட்டத்தில் 25 தமிழர்கள் தான் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தம்பலகமம், மூதூர், சாம்பல்தீவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டவர்கள்.

கைது செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல் திருமலைப் பிரஜைகள் குழுவிற்கு, பாதுகாப்புப் படையினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் நேற்று நடந்த கிரனேட் வீச்சுத் தாக்குதல்கள்

### மூவர்பலி; இருவர் காயம்

### பதில் தாக்குதலில் 4 பேர் காயம்

மட்டக்களப்பு, ஏப். 2

நேற்றுக் காலை மட்டக்களப்பு நகரின் வசக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் இரண்டு இடங்களில் கிரனேட் வீச்சுத் தாக்குதல்களை நடத்தினர்.

ஹோட்டல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரான அந்த ஹோட்டல் உரிமையாளர், அவரின் மகன், மாமனுர் ஆகியோர் மரணமானுர்கள்.

கோட்டைமுனைப் பொலீஸ் நிலைய சென்றி மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில், சென்றிக்கு நின்ற பொலீஸ் உயிர் தப்பினர்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது;

மட்டக்களப்பு, முகத்துவாரம் வீதியில் 'பசறை ஹோட்டல்' இருக்கிறது. பெரும்பான்மை இனத்தவர்களால் நடத்தப்பட்டு வந்த ஹோட்டல் அது.

நேற்றுக் காலை 10 மணியளவில் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்கள் அந்த ஹோட்டல் மீது கிரனேட் தாக்குதலை நடத்தினர்.

ஹோட்டலின் உரிமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானுறிலும் நேற்றுப் பதற்றம்

வல்வெட்டித்துறை, ஏப். 2

தொண்டமானுறு முகாமைவிட்டு சிப்பாய்கள் நேற்றுக்காலை வெளியேவர முயன்றபோது போராளிகள் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று அறிய வருகிறது.

இதனை அடுத்து சிப்பாய்கள் முகாமிற்குத் திரும்பச் சென்றுர்கள்.

இந்தச் சம்பவத்தை அடுத்து இப்பகுதியில் ஹெலிக்கொப்டர் வட்டமிட்டதால் இப் பகுதி மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலவியது.

## பண்டாரிக்கு புதிய பதவி

கொழும்பு, ஏப்.2

இந்திய வெளியுறவுச் செயலாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற திரு. ரொமேஷ் பண்டாரி, தெற்கு ஆசிய நாடுகள் ஸ்தாபனத்து ("சார்க்"கு) க்கான இந்தியாவின் விசேட தூதுவராக நியமனம் பெறுவார் என்று நம்பகமாகத் தெரிகின்றது.

தெற்காசிய ஸ்தாபனத்தில் இலங்கையும் ஓர் உறுப்பு நாடு ஏனைய உறுப்பு நாடுகள் வருமாறு; பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, இந்தியா.

'சார்க்' ஸ்தாபனத்துக்கான விசேட தூதராக இருந்து கொண்டு திரு. பண்டாரி, இலங்கை இனப்பிரச்சினையையும் கையாளக் கூடியதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

## பாதுகாப்பு அமைச்சில் மாநாடு

கொழும்பு, ஏப் 2

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகரித்து வரும் வன்செயல்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சில் கடந்த திங்கட்கிழமை உயர் மாநாடு ஒன்று நடந்தது.

அம்மாநாட்டில் ஆராயப்பட்ட விஷயங்கள், எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி விவரங்கள் வெளியிடப்படவில்லை



என்ன, காணுமல் போன இந்திய பிளேனுகளைப் பற்றி நான் தேற்றுவிட்ட "ஏப்ரல் பூல்" பகிடியை நீங்கள் நம்பிவிட்டியளே! அது சுத்தமான பகிடி. உண்மை எண்டு எடுத்திடாதையுங்கோ.

### வடபகுதி ரயில் சேவை

## முகம்மது - லலித் சந்திப்பின் பின்னரே முடிவு தெரியும்

கொழும்பு, ஏப். 2

போக்குவரத்து அமைச்சர் ஜனுப். எம். எச். முகம்மதுவும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியும் கூடிப் பேசிய பின்னரே யாழ்-கொழும்பு ரயில் சேவையை மீள ஆரம்பிப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

போக்குவரத்து அமைச்சு வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

வெளிநாடு சென்றிருந்த போக்குவரத்து அமைச்சர் ஜனுப் முகம்மது நேற்றுக்காலை கொழும்பு வந்து சேர்ந்தார்.

அவர் கொழும்பு வந்து சேர்ந்த கையோடு அண்மையில் ஓமந்தைக்கு அருகில் யாழ்தேவி ரயில் எரிக்கப்பட்டது தொடர்பான அறிக்கை ஒன்று அவரிடம் கையளிக்கப்பட்டது.

ரயில்வே திணைக்கள பொதுமுகாமையாளர் திரு ஜி எஸ் வீரசூரிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண

## ஏன் இந்தியாவிலிருந்து ஒருவர்? இலங்கையிலிருந்து ஒருவர் இங்கு வரலாமே!

### புதிய வெளியுறவுச் செயலாளர் கேள்வி

புதுடில்லி, ஏப். 1

இனப் பிரச்சினை பற்றி பேச இந்தியாவில் இருந்துதான் இலங்கைக்கு ஒருவர் அங்குபோகவேண்டுமா? இலங்கையில் இருந்து ஒருவர் இங்கு வந்தும் பேசலாமே!

இந்தியாவின் புதிய வெளியுறவுச் செயலாளரான திரு ஏ. பி. வெங்கடேஸ்வரன் மேற்கண்டவாறு சொன்னுர்.

திரு. வெங்கடேஸ்வரன் மேலும் சொன்னதாவது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு இந்தியாவின் நல்லெண்ண உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

ஆனுல் இலங்கையிடம் இருந்து சரியான பதில் எமது உதவிகளுக்குக் கிடைப்பதாக இல்லை.

அரசியல் தீர்வு பற்றி இலங்கை கூறிக்கொள்கிறது ஆனுல் அங்கு நடப்பவைகள் நல்லவையாகத் தெரியவில்லை.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா தொடர்ந்து உதவும்

இப்படி திரு. வெங்கடேஸ்வரன் சொன்னுர்.

### அரச அதிபர்கள் மாநாடு நாளை

யாழ்ப்பாணம், ஏப் 2

25 நிர்வாக மாவட்டங்களுக்குப் பொறுப்பான அரசாங்க அதிபர்களின் மாநாடு நாளை 3 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "போட்டோ கிராபர்" ரவிக்கு உதவினாராம் மோகன்

பல படங்களுக்கு புகைப்படக்கலைஞராக (ஸ்டில் போட்டோ கிராபர்) பணியாற்றியவர் ரவி.

'நான் உங்கள் ரசிகன்' படத்தின் மூலம் ரவி தயாரிப்பாளர் அந்தஸ்துக்கு உயர்ந்துள்ளார்.

அவர் உந்த நிலைக்கு உயர்வதற்கான காரணத்தை விளக்குகிறார்.

முதன் முதலில் கணேசன் என்பவர் சுபா சுந்தரம் அவர்களிடம் என்னை அறிமுகம் செய்து, அவரின் உதவியாளராகச் சேர்த்து விட்டார்.

திரைப்படக் கல்லூரியில் படிக்காமலேயே பெரிய ஸ்டில் போட்டோ கிராபராகவும் ஒளிப்பதிவாளராகவும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஏன் நாமும் அவர்களைப் போல் ஆகக் கூடாது என்ற எண்ணம் எனக்குள் ஏற்பட்டது.

அதன் பிறகுதான் சுபா சுந்தரம் அவர்களிடம் உதவியாளராக சேர்ந்து இந்தத் தொழில் நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டேன்.

நான் முதன்முதலில் போட்டோ எடுத்தது நடிகை லட்சுமியைத்தான். அப்போதெல்லாம் கொஞ்சம் ரிசர்வ் டைப்பாக இருப்பேன். நடிகைகளைப் படம் எடுக்கும் போது மிகவும் கூச்சப்படுவேன்.

இப்படியான சந்தர்ப்பங்களில் சுபாசுந்தரம் அவர்கள் உற்சாகம் கொடுத்து படம் எடுப்பதற்கு உதவி செய்வார்.

என்னை ஒரு முழு மனிதன் ஆக்கியவர் அவர்தான்;

சினிமாத்துறையில் ஸ்டில் போட்டோ கிராப்பர்களுக்கு சரியான மரியாதை கிடைப்பதில்லை, சில தயாரிப்பாளர்கள் பேசிய தொகையைக் கூட கொடுப்பதில்லை.

இதனால் ஏற்பட்ட விரக்தியினால் தான் நான் தயாரிப்பாளராக முடிவு செய்தேன்.

அதற்கு நடிகர் மோகன் முழு ஒத்துழைப்பும் உற்சாகமும் கொடுத்தார் என்றார்.

தினசரி சினிமா

## மெக்ஸிக்கோவில் விமான விபத்து
### 174 பேர் உயிரிழப்பு

மெக்ஸிக்கோ, ஏப்ரல் 1

மெக்ஸிக்கோ நகரில் இருந்து புறப்பட்ட பயணிகள் விமானம் ஒன்று விழுந்து நொருங்கி விட்டது

விமானத்திலிருந்த 166 பயணிகளும் 8 விமான சிப்பந்திகளும் இந்த விபத்தில் உயிரிழந்து விட்டனர்.

மீட்பு நடவடிக்கைகளில் கூடுதலான ஹெலிக்கொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மெக்ஸிக்கோ நகர் விமானத் தளத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த இந்த விமானம் போர்ட்டோ வெலாட்டோ லொஸ் ஏஞ்ஜலிஸ் நோக்கி பறந்து கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது

திரிப்போலி பல்கலைக் கழக

# ஆங்கில, பிரஞ்சு நூல்களை எரித்து விட வேண்டும்

### கேர்ணல் கடாபி விருப்பம்

திரிப்போலி, ஏப்ரல். 1

திரிப்போலி பல்கலைக் கழகத்திலுள்ள ஆங்கில, பிரஞ்சு பாடநூல்களைத் தீயிட்டுக் கொளுத்துமாறு கேர்ணல் கடாபி கேட்டுக் கொண்டுள்ளார்.

திரிப்போலி பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் ஆவேசமாக உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கடாபி கேட்டுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

லிபியா முழுமையாக அரபுமயப்படுத்தப் படவேண்டும் என வலியுறுத்திய கடாபி இந்த உணர்வை உறுதியாக்குவதற்கு ஆங்கில பிரஞ்சு நூல்களும் அவை தொடர்பான சிந்தனைகளும் முட்டுக்கட்டைகளாக இருக்கும் என மேலும் காரணம் கூறியுள்ளார்.

ஆங்கில, பிரஞ்சு நூல்களைத் தீயிட்டுக் கொளுத்தி அழித்துவிடுவது மட்டுமல்ல திரிப்போலி பல்கலைக்கழகத்திலுள்ள ஆங்கில, பிரஞ்சு கல்வித்துறைப் பிரிவுகளையும் உடனடியாக மூடிவிடவேண்டும் எனவும் கடாபி கருத்துத் தெரிவித்துள்ளார்.

லிபிய அதிபரின் இந்தத் தீவிர போக்கை பல்கலைக்கழக மாணவர்கள் அறிவுபூர்வமாக விமர்சித்ததாகவும் எதிர்ப்புகளைத் தெரிவித்துக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே ஐ. நாடுகள் பாதுகாப்பு சபையில் லிபிய, அமெரிக்க விவகாரம் தொடர்பான விடயம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சபையின் விவாதத்தின்போது லிபியப் பிரதிநிதி ஐ. நா. பாதுகாப்புச் சபைப் பணியகம் அமெரிக்காவிலிருந்து வேறிடத்துக்கு மாற்றப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஷித்தே வளைகுடாவில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளைக் கண்டித்து சோவியத் ரஷ்யாவும் பல்கேரியாவும் நிறைவேற்றிய கண்டனத் தீர்மானமே விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகும்.

எனினும் விவாதிக்கப்பட்ட விடயம் தொடர்பாக எந்தத் தீர்மானமும் எடுக்கப்படாத நிலையில் கூட்டம் ஒத்திப் போடப்பட்டது

ஷித்தேகுடாவில் அமெரிக்க நடவடிக்கைகளை அணிசேரா நாடுகள் பலவும் கண்டித்துள்ளன.

### சுப்பிரமணிய சுவாமி யோசனைக்கு

## தமிழீழ விடுதலை இயக்கம் ஆதரவில்லை

சென்னை, ஏப் 1

இந்துஸ்தான் முன்னணித் தலைவரும் ஜனதாக் கட்சிப் பிரமுகருமான டாக்டர் சுப்பிரமணிய சுவாமியின் தொண்டர் ராணுவம் ஒன்றைத் திரட்டி இலங்கைக்கு அனுப்பும் முயற்சிக்கு தமிழீழ விடுதலை இயக்கம் ஆதரவளிக்கவில்லை.

இப்படி சென்னையில் தமிழீழ விடுதலை இயக்கம் அறிவித்துள்ளது.

அப்படி ஆதரவு வழங்கியதாக வெளிவந்த செய்திகளை தமிழீழ விடுதலை இயக்கம் மறுத்துள்ளது.

டாக்டர் சுப்பிரமணிய சுவாமியின் திட்டம் குறித்து தமிழீழ விடுதலை இயக்கம் கருத்து எதையும் வெளியிடவில்லை

தொண்டர் ராணுவம் திரட்டுவது சம்பந்தமாக சில இயக்கங்களின் பெயர்களை டாக்டர் சுப்பிரமணியசுவாமி குறிப்பிட்டுள்ளார். அந்தப் பெயர்களுடன் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பெயரை டாக்டர் சுவாமி குறிப்பிட்டுள்ளது துரதிருஷ்டவசமானது.

இப்படி தமிழீழ விடுதலை இயக்கம் அறிவித்துள்ளது.

### பாரதம் ஹெலிக்கொப்டர் வாங்கும்

புதுடில்லி, ஏப்ரல் 1

பிரான்ஸிடம் இருந்து பாரதம் 27 ஹெலிக்கொப்டர்களை வாங்கும்.

பிரான்ஸ் ஹெலிக்கொப்டர் நிறுவனம் ஒன்றுடன் இதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

### மொஸாம்பிக் விமான விபத்து

மொஸாம்பிக் ஏப். 1

மொஸாம்பிக் விமானமொன்று பயணம் மேற்கொண்டிருக்கையில் வெடித்துச் சிதறி விபத்துக்குள்ளானது. இதிலிருந்த பயணிகள் பலரும் உயிரிழந்தனர்.

## வெளி உலகில்

### கலவரங்களை அடக்க ஒத்துழையுங்கள்
#### பஞ்சாப் முதல்வர் பர்னாலா எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு

சண்டிகார், ஏப்ரல் 1

பஞ்சாப்பில் பயனுள்ள வகையில் வன்முறைத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சிகளை முதலமைச்சர் பர்னாலா கேட்டுக் கொண்டுள்ளார்.

சண்டிக்காரில் நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில் வைத்தே பர்னாலா இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

சட்டப் பேரவையில் முதலமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

வன்முறைகளும் கொலைகளும் புற்றுநோய் போன்றவை. முளையிலே இவற்றைக் கிள்ளி எறியாது விட்டால் பயங்கரமாக இது உருக்கொண்டு விடும்.

இந்த வன்முறைகளுக்கு பாரதத்தின் அண்டை நாடு ஒன்று பயிற்சிக்களமாக இருந்து வருவது தெரியவந்துள்ளது.

இந்தப் பின்னணிகளால் இளைஞர்கள் தவறாக வழி நடத்தப்பட்டிருக்கிறார்கள். வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

இந்தச் சவால்களிலிருந்து நாட்டின் ஒருமைப்பாட்டையும் சட்டம், ஒழுங்கு சமாதானத்தையும் பாதுகாக்க கடின நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற் கொண்டு பஞ்சாப் மாநிலத்தில் வெளியாருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது, இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### தமிழ்நாட்டில் 11 அமைச்சர்கள் பதவி இழப்பர்

சென்னை, ஏப்ரல் 1

தமிழ்நாடு அரசு அமைச்சரவையில் 11 அமைச்சர்கள் பதவி விலகுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் புகார்களைத் தொடர்ந்து முதலமைச்சர் எம் ஜி ஆர். இவர்களைப் பதவி விலகுமாறு கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்னும் பெயர் அறிவிக்கப்படாத இந்த அமைச்சர்கள் பதவிவிலகலின் பின் கட்சிப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஹோமியோபதி மீளாய்வு வகுப்புக்கள்

5ஆவது மீளாய்வு வகுப்புக்கள் 1986 மே மாதம் ஆரம்பமாகின்றன. பங்குபற்ற விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் 20-04-86ஆம் திகதிக்கு முன்னர் நேரில் தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
வட இலங்கை ஹோமியோபதி சங்கம்
5, நாவலர் வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### டானியலுக்கு அஞ்சலி

கிளிநொச்சி, ஏப். 2

ஒடுக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக இறுதி மூச்சுவரை தனது பேனாவைப் பயன்படுத்திய முதுபெரும் எழுத்தாளன் டானியலின் மறைவு ஈழத்து மக்களுக்கு பெரும் இழப்பாகும்

கிளிநொச்சி பத்திரிகையாளர் வாசகர் நலன் புரிச் சங்கம் வெளியிட்ட அஞ்சலிச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**LANKA CEMENT LTD.**

KANKESANTHURAI.

## ஏல விற்பனை

1986-04-06 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை பாவிக்கப்பட்ட துண்டுக் கம்பிகள், முறுக்குக் கம்பிகள் "ஆங்கில் அயன்" எச். ஐ. வடிவ உருக்குத் திராந்திகள் என்பன லங்கா சிமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் 1986-04-05ஆம் திகதி சனிக்கிழமை தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையின் 3ஆம் கூற்று முடிவடைந்தவுடன் முழுத்தொகையின் 1/3 பகுதிப் பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்பட வேண்டும்.

பொருட்கள் பகுதி பகுதியாகக் கொள்வனவு செய்வோர் கூறப்பட்ட திகதியான 6ஆம் திகதி ஏப்ரல் 1986 இல் இருந்து 02 நாட்களுக்குள்ளும் முழுக்கூறுகளும் ஒன்றாகக் கொள்வனவு செய்வோர் மேற்கூறப்பட்ட திகதியில் இருந்து 5 நாட்களுக்குள்ளும் தொழிற்சாலை வளவில் இருந்து விற்கப்பட்ட பொருட்களை அகற்றவேண்டும்.

பொது முகாமையாளர்,
லங்கா சிமெந்து லிமிட்டெட்.

லங்கா சிமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.
1986-03-29.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### வடக்கு, கிழக்கு, மலையகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள
# அனைத்து வன்செயல்களும் உடன் நிறுத்தப்படவேண்டும்
#### அரச லிகிதர் சேவைச் சங்க யாழ். கிளை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

வடக்கு, கிழக்கு, மலையக மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அனைத்து வன்செயல்களும் உடன் நிறுத்தப்படவேண்டும்.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்க யாழ் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இப்படித் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பொதுக் கூட்டம் திரு. வி. எஸ். கனகரத்தினம் தலைமையில் கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்றது.

பின்வரும் தீர்மானங்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

* 1980 பொது வேலை நிறுத்தத்தில் வேலையிழந்தோர் அனைவரையும் மீளவும் நஷ்ட ஈட்டுடன் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.
* மீளவும் வேலைக்கு அமர்த்தப்பட்டோருக்கு எதிராக எடுக்கப்படும் பழிவாங்கல் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.
* எமது சங்கத்தினால் நிறைவேற்றப்பட்டு 1.10 1985 இல் மந்திரி சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட புதிய சம்பளத் திட்டத்தை அங்கீகரித்தல் வேண்டும்.
* தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து ஆயுதப் படையினரை வெளியேற்றவேண்டும்.
* அவசரகாலச் சட்டத்தை உடன் நீக்க வேண்டும்.
* சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டும்.
* தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நிறுத்தப்படல் வேண்டும்.
* சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தல் வேண்டும்.
* வடக்கு, கிழக்கு மலையக மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அனைத்து வன்செயல்களும் உடன் நிறுத்தப்படல் வேண்டும்.

### சேவை — நலம் — பாராட்டு



அரசாங்க அதிகாரியாக இருந்தும் அதிகாரத்தொனியோ, அடக்கமின்மையோ இன்றி, அன்புடனும் பண்புடனும் மக்கள் தொண்டனாகப் பணி புரிந்தவர் உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்ணர்.

1945ஆம் ஆண்டு உணவுத் திணைக்களத்தில் லிகிதராக அரச சேவையில் சேர்ந்தவர் இவர்.

தனது சேவைத் திறனால் படிப்படியாகப் பதவி உயர்வுகள் பல பெற்றார்.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக வலி-கிழக்கு (கோப்பாய் பிரிவு) உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றி அண்மையில் தன் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

யாழ்ப்பாணத் தேர்தல் ஆணையாளர் அலுவ[illegible] பணியாற்றிய இவர் 10 ஆண்டு[illegible] [illegible] லிகிதராகவும், இதன்பின் நெடுங்கேணி காரியாதிகாரியாகவும், வவுனியா மாவட்ட ஆட்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளராகவும், வவுனியா செயலக நிர்வாக அதிகாரியாகவும், வவுனியா மாவட்ட தலைமைக்காரியாலய உதவி அரச அதிபராகவும் பணியாற்றினார்.

1977இல் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் தேறினார்.

கோப்பாய்ப்பிரிவு உதவி அரச அதிபராக இருந்த காலங்களில் இப்பிரிவில் மக்கள் மத்தியில் இருந்து வந்த பல பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்த பெருமை இவருக்கே உரியதாகும்.

இவர் கல்வியங்காடு சாசிப்பிள்ளை வித்தியாசாலை, செங்குந்தா இந்துக் கல்லூரி, யாழ் இந்[illegible] பழைய மாணவராவார்.

### பணிமனை வேலை பூர்த்தி

பருத்தித்துறை, ஏப்ரல் 2

வலி-கிழக்கு (வடபகுதி) அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் மேற்கொண்ட பணிமனையின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

### 'அறிவியல் கதிர்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான மன்றத்தின் 'அறிவியல் கதிர்' வெளியீட்டு விழா நாளை 3 ஆம் திகதி காலை நடைபெறும்.

பிரதம அதிதியாக யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக மலேரியாத் தடுப்பு பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். சிவகுரு பங்குபற்றுவார்.

யாழ் பல்கலைக் கழக மேலதிக பதிவாளர் திரு. இ. முருகையன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

### ஒவ்வொரு வீடும் கல்விக்கூடமாக மாறவேண்டும்
#### பரிசளிப்பு விழாவில் உரை

வட்டுக்கோட்டை, ஏப் 2

இன்றைய காலகட்டத்தில் குண்டு வெடிப்புகள் எல்லாப் பகுதிகளிலும் இடம் பெற்றுக் கொண்டேயிருக்கின்றன. இதனால் பாடசாலை நடைபெறும் நாட்கள் குறைந்து கொண்டே செல்கின்றன. இந்நிலையை ஓரளவாவது குறைப்பதற்கு ஒவ்வொரு வீடும் கல்விக் கூடமாக மாறவேண்டும்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. கலாவல்லி ஆறுமுகதாசன் தலைமையில் விழா நடைபெற்றது.

பிரதம விருந்தினர் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கி உரையாற்றும் போது சிறந்த கல்விமான்களை உருவாக்கிய பெருமை யாழ்ப்பாணத்திற்கே உண்டு. உழைப்பால் உயர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள். எமது மக்களின் நிலையான சொத்து கல்வி. கல்விதான் வாழ்க்கையை மேம்படுத்துகிறது, சிறப்பாக வாழ வைக்கிறது.

இத்தகைய சிறந்த கல்வியை பிச்சை எடுத்தும் கற்க சகலரும் முன்வரவேண்டும் என்றார்.

வட்டு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா உரையாற்றும்போது, இக்கல்லூரி அதிபருக்கு விசேட சேவை நீடிப்பு வழங்க வேண்டுமென கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள்விடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

மந்திரம் உடலைச் சுத்தமாக்குகின்றது. கடவுள் நாமத்தை உச்சரிப்பதால் மனிதன் பரிசுத்தனாகின்றான் ஆகையால் அவன் நாமத்தை எப்போதும் ஜெபித்துக் கொண்டிரு.

-- அன்னை சாரதாதேவி


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, கின்சார் நிலைய வீதி, யாழ்ப்பாணம். 02-04-86 தொலைபேசி: 24805 22073 உ. பெ. 23


## மத சுதந்திரத்திலும் கை வைக்கப்படுகிறது

வடபகுதியின் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்றான தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில், பூசை இழந்து கிடக்கிறது.

ஆலயப் பிரதேசத்தில் பலர் சுட்டுக்கொல்லப்பட்டுச் சடலங்கள் அங்கேயே கிடந்தன அதனால் இனி ஆகுசத்தைக் களையும் விசேஷ பூசைகள் செய்த பின்னரே நித்திய பூசை நடத்தலாம்.

ஆலயத்துக்குச் சமீபமாக ஆயுதப்படை முகாம் உண்டு அதனால் அங்கு பூசை செய்வதற்காக அர்ச்சகர்கள் மணி அடித்தாலும் அதற்கு வேறு அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன அர்ச்சகர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். அத்தோடு ஆலய வழிபாட்டுக்குச் செல்லும் பக்தர்களும் "பயங்கரவாதி"களாகப் பார்க்கப்படுகிறார்கள்.

எனவே பூசையும் செய்ய முடியாது, பக்தர்களும் வழிபாட்டுக்குச் செல்ல முடியாது என்ற நிலை அங்கு.

வடபதியில் உள்ள பல ஆலயங்களுக்கு, குறிப்பாக ஆயுதப்படை முகாம்களுக்கு சமீபமாக உள்ள ஆலயங்களுக்கு இதே நிலைமை. மக்கள் அச்ச உணர்வோடு வழிபாட்டுக்குச் செல்லும் அவலம்.

மட்டக்களப்பில் தாண்டவன் வெளி என்ற இடத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் பிரார்த்தனை நடந்துகொண்டிருந்தபோது ஆயுதப்படையினர் அதனை முற்றுகையிட்டனர். பக்தர்களைச் சோதனை செய்தனர் இவ்வாறு ஒரு செய்தி கூறுகிறது.

மொத்தத்தில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தமது சமய அனுஷ்டானங்களைச் செய்வதற்கு மறைமுகமாக தடை விதிக்கப்படுகிறது. மத சுதந்திரத்திலும் மெது மெதுவாகக் கை வைக்கப்படுகிறது.

இது மிகவும் பாரதூரமான விவகாரம் மனிதன் இறக்கும்போது யாரை நினைக்காவிடினும் ஆண்டவனை நினைக்கிறான் வாழ்க்கை முழுவதும் பெரும் நாஸ்திக வாதியாக இருப்பவனும், மரண வேளையில் ஆண்டவனையே வேண்டுதல் செய்வது உண்டு.

இலங்கையில் தமிழன் இப்போது மரணத் தறுவாயில்தான் இருக்கிறான். எந்த நிமிடமும், வீட்டிலும், வீதியிலும், வேலை இடத்திலும் மரணம் வரலாம் என்ற ஒரு நிலைக்குத் தமிழன் வந்து விட்டான். அவன் இந்தத் தறுவாயிலேனும் ஆண்டவனைத் துதிக்க இடம் தர மறுக்கப்படுகின்றது.

மத சுதந்திரம் மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று.

ஆனால் இலங்கை அரசாங்கம் அடிப்படை உரிமை என்றால் பருப்பா, கோழியா என்று கேட்கும் நிலையில் உள்ளது. அதனிடம் போய் ஆலய வழிபாட்டுக்கு குந்தகம் விளைவிக்கப்படுகிறது என்று முறையிடுவதால் பலன் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

எங்கள் ஆயுதப்படைகளை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நிறுவி உள்ளோம். நீங்கள் வேண்டுமானால் ஆலயங்களை வேறு இடங்களுக்கு நகர்த்துங்கள்.

ஆலயங்களைப் பயங்கரவாதிகள் தங்கு முகாம்களாகப் பாவிக்கிறார்கள். ஆகையால் நாம் அவற்றைச் சோதனை இடாமல் இருக்க முடியாது

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சும் அரசாங்கமும் நிச்சயம் கோணல் நியாயம் பேசும் எனவே தமிழ் மக்களின் வழிபாட்டுச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்று அதனிடம் முறையிட்டு கிடைக்கப்போவது எதுவுமில்லை.

தமிழினம் அழிக்கப்படுகிறது என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுவது எவ்வளவு அவசியமோ அதே போல ஆலயங்கள் அவமதிக்கப்படுதல், பக்தர்கள் இம்சிக்கப் படுதல், பூசைகள் தடுக்கப்படுதல் என்பன குறித்தும் வெளி உலகுக்குப் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்

மதங்களை மதியாத அளவுக்கு மனிதனுக்கு மதிகெடுமானால் அது அவனது அழிவுக்கு முதற்படி. வடக்கு, கிழக்கில் மத வழிபாடு தடுக்கப்பட்டால் அதனால் விளையும் பாவம் தடுப்போரின் சந்ததி முழுவதற்கும் பரந்து கர்மவினை செய்யும் என்று கொள்வதை தவிர வேறு வழி என்ன?

## நீர்வரி, விவசாயக் கடன் அறவிடுவதை ஒத்திவைக்க அபி. சபை கோரிக்கை

அம்பாறை, ஏப். 2

இரண்டு தரம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் விவசாயிகளிடம் இருந்து நீர்வரி, விவசாயக் கடன் அறவிடுவதை ஒத்திப்போடும்படி அரசாங்கத்தைக் கோருவது என்று அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபை தீர்மானித்தது.

பிரேரணையை சம்மாந்துறை எம்பியும் பிரதி அமைச்சருமான ஜனாப். எம். ஏ. அப்துல் மஜீத் கொண்டு வந்தார்.

இரண்டு தரம் ஏற்பட்ட வெள்ளத்தினால் கிழக்கு மாகாணத் தமிழ், முஸ்லிம் விவசாயிகள் பலத்த நஷ்டத்தை அடைந்து விட்டனர்.

இருந்தும் அவர்கள் ஏக்கருக்கு 100 ரூபா வரியாகவும் பெற்ற விவசாயக் கடனைத் திருப்பிச் செலுத்தவும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் இதனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கால அவகாசம் வழங்க வேண்டும்.

இப்படி பிரதி அமைச்சர் ஜனாப். அப்துல் மஜீத் சொன்னார்.

★ மருதமுனை கடற்கரையில்

# ஆயுதத்துடன் வந்த கோஷ்டி

## இருவர் பிடிபட்டனர்

கல்முனை, ஏப் 2

மருதமுனைக் கடற்கரையில் ஆயுதங்களுடன் காரில் வந்து இறங்கி நடமாடிய கோஷ்டியில் இரண்டு பேர் கிராம மக்களிடம் வசமாக மாட்டிக்கொண்டனர்

மாட்டிக் கொண்ட இரண்டு பேரும் முஸ்லிம்கள். அவர்களைப் பிடித்த கிராம மக்களும் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கைத்துப்பாக்கிகளுடன் பிடிபட்ட இருவரும் மருதமுனை கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவம் குறித்து சொல்லப்படுவதாவது:

ஞாயிறு நள்ளிரவு நேரம் கார் ஒன்று மருதமுனைக் கடற்கரையில் வந்து நின்றது. அதில் இருந்து ஆயுதங்களுடன் 6 பேர் இறங்கினார்கள்.

நிந்தவூர்ப் பக்கம் இருந்து இந்தக் கார் வந்தது.

மருதமுனை, ஒரு முஸ்லிம் கிராமம். இந்தக் கார் ஏன் வந்தது என்று கிராமத்து மக்கள் சந்தேகம் கொண்டனர்.

இரண்டு கடற்கரை நோக்கி வந்தபோது, கடற்கரையில் நடமாடிய இளைஞர்கள் பக்கத்தில் இருந்து துப்பாக்கிச் சூடுகள் வரத் தொடங்கின.

இதனிடையில் ஊர் மக்களில் சிலர் காரின் திறப்பைக் கைப்பற்றிவர்.

ஊர் மக்கள் அதிகமாகக் கூடவே இரண்டு இளைஞர்களை விட ஏனையோர் தலைமறைவாகி விட்டனர்.

அந்த இரண்டு இளைஞர்களும் காரில் ஏறித் தப்ப முயற்சித்தனர். ஆனால் காரின் சாவிகள் இல்லாததினால் தப்பிச் செல்ல முடியவில்லை.

ஊர் மக்களிடம் வசமாக அகப்பட்டுக் கொண்டனர். அவர்கள் முஸ்லிம்கள் என்று அப்பொழுது தெரியவந்தது.

மருதமுனைக் கிராம சேவையாளரிடம் திங்கள் காலை அந்த இரண்டு பேரையும் ஊர் மக்கள் ஒப்படைத்தனர்

## கல்வி பணிப்பாளருக்கு பாராட்டு விழா

மானிப்பாய், ஏப் 2

நவாலி மகாவித்தியாலயத்தைசேர்ந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருடன் இணைந்து யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கத்திற்கு பாராட்டு விழா ஒன்றை நடத்த உள்ளனர்.

எதிர்வரும் 4 ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு நவாலி மகாவித்தியாலய மண்டபத்தில் இவ்விழா நடைபெறும்.

பாராட்டு விழாவில் 'உதயன்' 'சஞ்சீவி' பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் திரு. ம. வ. கானமயில்நாதன், 'ஈழமுரசு' ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம், 'ஈழநாடு' நிர்வாக ஆசிரியர் திரு. என். சபாரத்தினம், மற்றும் கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி, இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். பி. சிவபாதம், மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன், நவாலி பிரஜைகள் குழு தலைவர் திரு. சி. ரி. இளையதம்பி, நவாலி இணக்க சபைத் தலைவர் திரு. டி. சடாச்சரம் உட்பட பலர் பாராட்டுரை வழங்குவர்

## மட்டக்களப்பு

### சோலைவரி அதிகரிப்புக்கு வரியிறுப்பாளர் எதிர்ப்பு

மட்டக்களப்பு,ஏப்ரல் 2

மட்டக்களப்பு மாநகர சபை சோலைவரி அதிகரிப்புக் காரணமாக வரியிறுப்பாளர்கள் ஒருமித்து ஆட்சேபனை தெரிவிக்கிறார்கள்.

ஆனால் மாநகரசபை ஆணையாளரோ அதனை செவிசாய்க்காமல் வரி அதிகரிப்பில் மாற்றம் இல்லையென சவால் விடுமளவுக்கு செயல் படுகின்றார்.

மட்டக்களப்பு மாநகர சபை வரியிறுப்பாளர் சங்க விசேட கூட்டத்தில் உரையாற்றிய செயலாளர் திரு பி வி. கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆனைப்பந்தி மகளிர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஏராளமான வரியிறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

சங்கத் தலைவர் திரு கே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் செயலாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

எமது பகுதி மக்கள் இன்றைய சூழ்நிலையில் உயிர், உடைமை பாதுகாப்பு இன்றி நிம்மதியிழந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் இவ் அதிகரிப்பு எமக்கு அவசியமில்லை.

மக்கள் அங்கத்துவம் இழந்த நிலையிலிருக்கும் போது இத்தகைய சுயமான முடிவு எடுத்துள்ளார்.

எமது பகுதி அபிவிருத்தியடைய வேண்டுமென்று விரும்புகின்றோம். அதற்கு தற்போதைய சூழ்நிலை பொருத்தமானதல்ல என்றார்.

## கலை, கலாசாரம் வளர புத்திஜீவிகளுக்குஊக்கம்

### குடும்ப முதலுதவி நூல் வெளியீட்டு விழாவில் உரை

பருத்தித்துறை, ஏப். 2

'தமிழினத்தின் கலை, கலாசார, பொருளாதார மேம்பாட்டுக்கு எம்மிடையேயுள்ள புத்திஜீவிகளை ஊக்குவிக்க வேண்டும். தமிழினத்தின் புத்திஜீவிகள் பலர் இந்நாட்டைவிட்டு வெளியேறியது எமக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

குடும்பமுதலுதவி நூல் வெளியீட்டுவிழா, நெல்லியடி மத்திய மகாவித்தியாலய இராஜலிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

நூல் வெளியீட்டுவிழா கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில்நடைபெற்றது.

விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தொடர்ந்து பேசியதாவது;

இன்றைய சிந்தனைகள் நூலாசிரியரை மையமாகக்கொண்டெழுகின்றன.

இதனால் தமிழ் மக்களின் கலைவம்சங்களின் சிந்தனைகள் விஞ்ஞான பூர்வமாக மக்களின் முன்னர் படைக்கப்படவேண்டும்.

இம்முயற்சியில் இந் நூலாசிரியர் வெற்றி கண்டுள்ளார்.

இவர் தன் ஆளுமையினால் இன்றுள்ள சமூகத் தேவையை மையமாக வைத்து சமூகத்தின் இன்றுள்ள பிரச்சினைகளில் ஈடுபட்டு அதனை அனுபவத்தில் பெற்று இந்நூலை ஆக்கியுள்ளார்.

இப்படி அவர் கூறினார்.

வவுனியா மாவட்ட கல்விப் பணிப்பாளர்திரு. வெ. சபாநாயகம் பேசுகையில், தாய்மார்கள் தமது குழந்தைகளைச் சுயநலவாதிகளாக வளர்க்கக்கூடாது.

அவர்களைப் பொதுநலவாதிகளாகச் சிறுவயதிலிருந்தே வளர்க்கவேண்டும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தனியே வியாபார நோக்கமாக இருக்காமல் சமூகப்பணியிலும் ஈடுபடவேண்டும்.

இன்று கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் முன்மாதிரியாக இந்நூலை வெளியிட்டதன்மூலம் சமுதாயத்திற்குத் தன்னால் இயன்ற சிறுபணியைச் செய்துள்ளது என்றார்.

யாழ் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. [illegible] பல்கலைக்கழக வைத்திய [illegible]


பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி எஸ். ஆனந்தராஜா, விக்கினேஸ்வரா கல்லூரி அதிபர் திரு. க. சிவபாதசுந்தரம், யாழ் குடும்பநலத் திட்டமிடல் அதிகாரி திரு அ. ச. பூவேந்திரன், மக்கள் வங்கி முகாமையாளர் திரு. வீ. டபிள்யூ. சிதம்பரப்பிள்ளை, சென் ஜோன் அம்புலன்ஸ்படை வடமாநில ஆணையாளர் வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி,முற்போக்கு எழுத்தாளர் நெல்லை க. பேரன், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் ஆகியோரும் பேசினார்கள்.

### பாராட்டு விழா

கரவெட்டி, ஏப் 2

யாழ் கல்வித் திணைக்களத்தில் கல்வி அதிகாரியாகக் கடமை புரிந்து தற்போது வவுனியா மாவட்ட கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. வெ. சபாநாயகத்துக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் உடுப்பிட்டி கிளை பாராட்டு விழா நடத்தும்.

எதிர்வரும் சனிக் [illegible] கல்லூரி அதிபர் தலைமையில் விழா நடைபெறும்.



பொய்யாமொழி

குறள்:

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்.

பொருள்:

தன்நெஞ்சம் நடுவு நிலைமை நீங்கித் தவறு செய்ய நினைக்குமாயின், 'நான் கெடப்போகின்றேன்' என்று ஒருவன் அறிய வேண்டும்.

## செல்வாவின் தீர்க்கதரிசனம் இன்று நிறைவேறுகிறது

### பிறந்த நாள் நினைவு கூட்டத்தில் நடராசா உரை

நல்லூர், ஏப்ரல் 2

தந்தை செல்வா அன்று தீர்க்கதரிசனமாக கூறிய சமஷ்டி ஆட்சிமுறையே இன்னும் குறுகிய காலத்தில் எமது மக்களுக்குக் கிடைக்கப் போகிறது.

நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற தந்தை செல்வா பிறந்த நாள் நினைவு வைபவத்தில் கலந்து கொண்ட யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை முன்னாள் தலைவர் திரு எஸ் நடராசா இவ்வாறு தெரிவித்தார்.

தந்தை செல்வா அறங்காவல் குழுத் தலைவர் திரு. கு. நேசையா வைபவத்திற்கு தலைமை வகித்தார் திரு. நடராசா மேலும் பேசுகையில்;—

தந்தை செல்வா இன்னும் எம்மை விட்டுப் பிரியவில்லை. மனிதனுடைய வாழ்வை எம்மால் நிச்சயிக்க முடியாது என்றார்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் தந்தை செல்வாவுக்காகவும் கோப்பாய் முன்னாள் எம். பி திரு கதிரவேற்பிள்ளைக்காகவும் ஒரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ் மாநகர ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானம் உரையாற்றும் பொழுது வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதைத் தமிழ் மக்கள் என்றும் ஆதரிக்க மாட்டார்கள்.

ஏனெனில் வடக்கும் கிழக்கும் தமிழ் மக்கள் ஒன்றிணைந்த பாரம்பரிய பிரதேசம் இந்த நாடு பிரியக்கூடாது என்றதற்காக அன்று தந்தை செல்வா சமஷ்டி அரசைக் கோரினார்.

ஆனாலும் அவரது 25 வருட அரசியல் அனுபவத்தின் பின்தான் தமிழ் மக்களுக்கு ஒரு சுதந்திரமான தாயகம் வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இப்படி அவர் தெரிவித்தார்.

மற்றும் தலைவர் கு. நேசையா, யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. கு பராசிங்கம் அறவழிக்குழு செயலாளர் திரு.க.ஜீவகதாஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

## குளம் ஆழமாக்கும் பணியில் மல்லாகம்

### கிராம அபிவிருத்தி சங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 2

நீலியம்பனைக் குளம், பெரிய தம்பிரான் குளம் ஆகியவற்றை ஆழமாக்கும் பணியில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஈடுபட்டுள்ளது

இது குறித்து பிரேரணை ஒன்று மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரனால் கொண்டு வரப்பட்டது.

அச்சமயம் அவர் பேசுகையில் சொன்னதாவது;

யாழ் குடா நாட்டில் சுமார் 200 குளங்கள் வரையில் உள்ளன. அவற்றை ஆழமாக்கி ஒரு துளி மழை நீர் தானும் கடலினுள் செல்லாது தேக்கி வைத்தால் குடாநாட்டில் நீர்ப் பிரச்சினையே இருக்க மாட்டது.

அது மாத்திரம் அல்ல குழாய்க் கிணறுகள் தோண்டுவதாலும் பிரச்சினைகள் ஏற்படமாட்டா.

மல்லாகம் பகுதியில் உள்ள குளங்களை ஆழமாக்க வேண்டியது அவசியம். வயல்களில் குழாய்க் கிணறுகளைத் தோண்டும் முன்னர் இது செய்யப்பட வேண்டும்.

நிலத்தினுள் செல்லும் நீரிலும் பார்க்க நிலத்தில் இருந்து இறைக்கப்படும் நீர் குறைந்த அளவாக இருக்க வேண்டும்.

நீலியம்பனைக் குளம், பெரிய தம்பிரான் கோயில் குளம் ஆகியவற்றை சங்கம் ஆழமாக்க வேண்டும். அப்போது வெட்டி எடுக்கும் மண்ணைக் கொண்டு விளையாட்டு மைதானத்திற்கு வாங்கிய காணியை சமப்படுத்தலாம்.

இப்படி திரு. ஸ்ரீபாஸ்கரன் சொன்னார்

சங்கச் செயற்குழு பிரேரணையை ஏற்றுக் கொண்டது.

## வழமைக்கு மாறான சட்டங்களை நீக்கி ஒரு தீர்வுக்கு வாருங்கள்

### ஜனாதிபதிக்கு கம்பஹா எம். பி அறிவுரை

கொழும்பு, ஏப். 2

வழமைக்கு மாறான சட்டங்களை நீக்கி சாதாரண சட்டங்களை நாட்டில் அமுல் நடத்தி இனப் பிரச்சினைக்கு அவசர தீர்வு காணுங்கள்.

கம்பஹா எம். பி திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயம் மிகச் சிக்கலாகி வருகிறது.

வடக்கு, கிழக்கு நிலைமை மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளது.

வழமைக்குப் புறம்பான சட்டங்கள் அமுல் நடத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். சாதாரண சட்டங்கள் அமுல் நடத்தப்பட வேண்டும். அதன் பின்னர் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதைத் துரிதப்படுத்த வேண்டும்.

மலையகத் தமிழருக்கு வாக்குரிமை வழங்குவது சம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொடக்கிய பிரார்த்தனை இயக்கத்தக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு கண்டது இந்த அரசாங்கம். அது போன்று தாதிகள் வேலை நிறுத்தத்துக்கு அரசாங்கம் ஏன் தீர்வு காணக் கூடாது?

இப்படித் திரு. பண்டாரநாயக்கா தனது கடிதத்தில் கேட்டுள்ளார்.

## இராணுவ தேடுதலின்போது நெல் மூடைகள், விடுதி தீயில்

கிளிநொச்சி, ஏப். 2

முரசுமோட்டைப் பகுதியில் இராணுவத் தேடுதலின் போது நீர்ப்பாசன திணைக்கள விடுதியும் அதனுள் இருந்த சுமார் 150 - க்கு மேற்பட்ட நெல் மூடைகளும் எரிந்து சாம்பலாகின

இதன் அருகில் சூடு அடிப்பதற்குத் தயாராக இருந்த படங்குகள் உழவு இயந்திரப் பெட்டி, மூன்று ஏக்கர் நெற் சூடு என்பனவும் தீக்கிரையாகின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் நடந்தது.

மற்றொரு சம்பவத்தில் பரந்தன் இரண்டாம் கட்டை அருகே சுமார் 20 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். சிலர் இராணுவ விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

நீர்ப்பாசன திணைக்களத்தில் நிலைவப்புச் சம்பவம் இடம்பெறமுன் சுமார் 100 மூடை நெல் லொறி ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்டன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதி ஒரே புகை மண்டலமாகக் காணப்பட்டது மக்கள் பீதியுடன் காணப்பட்டனர்.

கிளிநொச்சியின் பல இடங்களிலும் தினமும் இராணுவ ரோந்து இடம்பெற்று வருகிறது.

ஆங்காங்கே பலர் திடீரெனக் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

### ராமகிருஷ்ண சாரதா மகளிர் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 2

கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

அதிபர் திருமதி செல்வநாயகி நவரத்தினம் தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்டக் கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம், சிறப்பு விருந்தினராக நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்

மாணவ தலைவி செல்வி அன்ரனற் பாமனாபாலச்சந்திரன் நன்றி சொன்னார். கலைக் கதம்ப நிகழ்ச்சிகள் இறுதியில் இடம்பெற்றன

### உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், ஏப். 2

அரசாங்க லிகிதர் சேவைச்சங்க யாழ் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:— வி. எஸ். கனகரத்தினம் துணைத் தலைவர்:— எஸ். கந்தசாமி செயலாளர்;— இ. தவராசா துணைச் செயலாளர்:— வி. மகாலிங்கம் பொருளாளர்:— எஸ். ஆர். ஜெயப்பிரகாசம் செயற்குழு:— வ. பொன்னம்பலம்,எம். செல்லையா, திருமதி. எஸ். சிவஞானம் எம். வைத்தியகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட்
நாவலடி லேன், திருநெல்வேலி.
பௌதீகம் -பத்மநாதன் B.Sc. (Hons)
A/L 86 - இளியியல் ஏப்ரல் 5 முதல்
A/L 87 - வெப்பவியல் ஏப்ரல் 5 முதல்
A/L 88 - அளவீடுகள் ஏப்ரல் 5 முதல்
A/L 87 - இரசாயனம்-மகாதேவா B Sc. (Hons)
அசேதன இரசாயனம் ஏப்ரல் 2 முதல்

# உதயன்

02. 04. 1986 புதன்கிழமை

நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட்
நாவலடி லேன், திருநெல்வேலி.
A/L 88 Batch - ஆரம்பம் ஏப்ரல் 5 முதல்
பௌதீகம் - பத்மநாதன் B.Sc. (Hons)
இரசாயனம் - மகாதேவா B.Sc. (Hons)
தாவரவியல் ; சிவவீரசிங்கம் B.Sc. (Hons)
விலங்கியல் - சிறீசரண B.Sc. (Hons)
தூய/பிரயோக
கணிதம்- குணசிங்கம் B.Sc. (Hons)
நேரடியாக கல்வி நிறுவனத்தில் பெறவும்.

# ஆனையிறவில் மக்கள் இடம் பெயர்வு

## இரவு பகலாக தேடுதல்

கிளிநொச்சி, ஏப். 2

ஆனையிறவு உப்பளப் பகுதியில் இரவு பகலாக நடைபெறும் தேடுதல்களால் அப் பகுதியில் இருந்தும் மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

ஆனையிறவு உப்பளப் பகுதியில் சில நாட்களுக்கு முன் சில வீடுகள் உடைத்துச் சோதனையிடப்பட்டன.

கடலில் வேலை செய்த சிலர் தேடுதலின்போது கைது செய்யப்பட்டு கிளிநொச்சி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை கிளிநொச்சி ஜெயந்திநகர்ப் பகுதியில் சாதாரண உடையில் ஆயுதம் தரித்த பலர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இப்பகுதியில் பலரும் பெரும் பீதியடைந்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க, கடந்த சனிக்கிழமை லொறி ஒன்றில் வந்த சாதாரண உடை அணிந்த ஆயுதம் தரித்தவர்கள் முரசுமோட்டைப் பகுதியில் மூன்று இளைஞர்களைக் கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

இராணுவத்தினர் கரடிப்போக்குப் பகுதியிலும் சிலரைக் கைது செய்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

## தவறிவிட்டது

க. நவரட்ணராஜா, ஆசிரியர், செட்டிகுளம் எனது அடையாள அட்டையும், முக்கிய சிறு பொருளும் பேர்சுடன்; இணுவிலுக்கும் உடுவில் மகளிர் கல்லூரிக்கும் இடைப்பட்ட பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து 'ஜெனு-ன்ஸ் ஹாட் வெயர்ஸ்' இணுவில் அல்லது உடுவில் மகளிர் கல்லூரியில் ஒப்படைத்துச் சன்மானத்தைப் பெற்றுக்கொள்ளவும். அல்லது க. நவரட்ணராஜா 'தங்க மஹால்' இணுவில் மேற்கு, இணுவில என்ற விலாசத்திற்கு கடிதத் தொடர்பு கொண்டால் நேரில் வந்து பெற்றுக் கொள்வோம்.

## விற்பனைக்கு

Broilers - இறைச்சிக் கோழிகள் உரித்த நிலையிலும் உயிர்க் கோழியும் விற்பனைக்குண்டு. ஹோட்டல்களுக்கு விசேட கழிவு தரப்படும் தொடர்பு:- Red Rose Farm, Theniambai, Street, Valvettithurai, Gem Palace, 57, Kannathiddy, Jaffna. T. Phone No. 22446

# விளையாட்டரங்கு

## பாடும்மீன் அணி வெற்றி!
### இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப் 2

அண்மையில் நடைபெற்ற 7 பேர் கொண்ட 'நொக்கவுட்' முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக 'பி' அணி வெற்றியீட்டியது.

கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழக அணியை பாடும்மீன் அணி 1 க்கு 0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

இணுவில் சிவப்பிரகாச மகா வித்தியாலய மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது.

இதன் மூலம் இணுவில் கலை ஒளி சனசமூக நிலைய 20 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் விளையாடும் தகுதியை பாடும் மீன் அணி பெற்றுள்ளது

## பன்னிரண்டு ஓவர் கிரிக்கெட் போட்டி
### விண்ணப்ப முடிவு திகதி நாளை

யாழ்ப்பாணம், ஏப் 2

7பேர் பங்குகொள்ளும் 12 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டிக்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி நாளையாகும்.

புது வருடத்தை முன்னிட்டு நடத்தப்படும் இந்த 'நொக் அவுட்' முறையிலான போட்டிக்கான ஒழுங்குகளை ஈச்சமோட்டை சனசமூக நிலையம் ஏற்பாடு செய்து வருகிறது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

ஏ இராஜேந்திரா, ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகம் (ஈச்சமோட்டை சனசமூக நிலையம்) ஈச்சமோட்டை.

## சிவன் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 2

ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் கரப்பந்தாட்ட 'நொக் அவுட்' போட்டியின் ஆட்டம் ஒன்றில் திருநெல்வேலி சிவன் விளையாட்டுக் கழக "பி" அணி வெற்றிபெற்றது.

இந்த அணி கடந்த சனிக்கிழமை ஈச்சமோட்டை சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியை 7-15, 15-2, 5-3 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தது.

## நான்கு பேருக்கு வீர வணக்கம்

சென்னை, ஏப். 1

வீர மரணம் அடைந்த தமது இயக்கப் போராளிகள் நான்கு பேருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வீர வணக்கத்தை தெரிவித்திருக்கிறது

இது தொடர்பாக புலிகள் இயக்கம் சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 30 ஆம் திகதி பரந்தனில் எமது இயக்க வீரர் றேகன், இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரமரணமடைந்தார்.

கடந்த 31 ஆம் திகதி அதிகாலை 5 30 மணியளவில் வந்தாறுமூலையில் டிராக்டரில் வந்த எமது வீரர்களுக்கும் பொலீஸ் கொமாண்டோக்களுக்கும் இடையில் எதிர்பாராது நடைபெற்ற மோதலில் பல கொமாண்டோக்கள் பலியாகினர். இந்தச்சம்பவத்தில் எமது வீரர்களான விமல்ராஜ், ஸ்டார் ஆகிய இருவரும் வீரமரணமடைந்தனர்.

இன்று அதிகாலை பருத்தித்துறையில் இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் எமது இயக்க வீரர் ஸ்டாலின் (கிருஷ்ணபிள்ளை சிறீஸ்கந்தநாதன்; புலோலி தெற்கு) வீரமரணமடைந்தார்.

வீரமரணமடைந்த இந்த விடுதலைப் புலிகளுக்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றோம்,

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## மட்டக்களப்பு மாவட்ட அதிகாரி

மட்டக்களப்பு, ஏப். 2

மட்டக்களப்பு மாவட்ட இணைப்பு அதிகாரியாக திரு. டொனல்ட் மெண்டிஸ் நேற்றுப் பதவி ஏற்றார்.

களுத்துறை பொலீஸ் பயிற்சிக் கல்லூரிப் பணிப்பாளராக திரு. மெண்டிஸ் இதுவரை காலமும் பணியாற்றினார்.

## யாழ்.பல.நோ.கூ.ச. வேலைநிறுத்தம்

நல்லூர், ஏப். 2

நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்காவிடில் யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க வேலை நிறுத்தம் மற்றைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

இது சம்பந்தமாக கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் நேற்று விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

எமது யாழ். பட்டினக் கிளையினால் மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தத்திற்கு இன்று வரை சங்க நிர்வாகம் எதுவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து எமது மற்றைய கிளைகளையும் வேலை நிறுத்தத்தில் குதிக்கவைக்க எமது தொழிற் சங்கம் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எமது கோரிக்கைகளைத் தீர்த்து வைக்காது கிளையின் வேலைநிறுத்தத்தை முறியடிப்பதற்கு நிர்வாகம் முயற்சிக்குமானால் நாம் தொழிற்சங்கக் கூட்டுக்குழுவின் ஆதரவுடன் பாரிய வேலைநிறுத்தம் ஒன்றை எமது பகுதியில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் நேற்று நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் யாழ்-மாநகர சபைக்குட்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் பெருமளவு கலந்து கொண்டனர்.

இன்றும் இவ்வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுமெனவும் நிர்வாகம் இதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் அடுத்த சில தினங்களில் நல்லூர், மானிப்பாய், தெல்லிப்பளை, நீர்வேலி போன்ற பகுதிகளுக்கும் வேலை நிறுத்தம் விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய வேலை நிறுத்தம் காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரை நடந்தது

கூட்டுறவு நிர்வாகத்திற்கு எதிரான சுலோக அட்டைகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

பெண் ஊழியர்களும் இவ்வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

எமது புதிய வெளியீடுகள்

* மோகன் — நதியா
"உயிரே உனக்காக"
(Pyramid Master)

* தியாகராஜன் — ராதிகா
"மச்சக்காரன்"
(V. G. P Master)

குணம்
வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 23665

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மு. நடராசா

மண்ணுலக வரவு: 09-05-1918 — விண்ணுலக விரைவு: 07-04-1983

அன்பு வழிகாட்டி ஆதரவு நல்கி இங்கு தமாய் பேரி ஈடின்றி வாழ்ந்து திடீரென எங்களை விட்டு பிரிந்து மூன்று ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டகலாது. அன்பு தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய 3.4.86 இல் பிரார்த்திக்கிறோம். உற்றார் உறவினர் அனைவரையும் அன்புடன் பிரார்த்தனை செய்ய வேண்டுகிறோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பற்றைகளில்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

5 பிள்ளைகளின் தந்தை. உறவினர்களுக்குப் பால் விநியோகிக்கச் செல்கையில் வழியில் சூட்டுக்கு இலக்கானார்.

மயிலிட்டி — கட்டுவன் வீதியில், வெங்காய வியாபாரியான—செட்டி என்றழைக்கப்படும்— துரைச்சாமி (வயது 38) என்பவரும் சுடப்பட்டு அதே இடத்தில் மரணமானார்.

கட்டுவனில் சாரதியாகத் தொழில் புரியும் கந்தப்பிள்ளை கணேசமூர்த்தி (30 வயது) என்பவர் தோளில் குண்டு பட்டு படுகாயமடைந்து தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவங்களில் காயமுற்ற ஏனையோர் தனியார் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து பலாலி விமானத் தளத்தில் இருந்து ஏவப்பட்ட எட்டுக்கும் மேற்பட்ட ஷெல்களும், பீரங்கி வேட்டுக்களும் பல வீடுகளைத் தாக்கியுள்ளன. கட்டுவன் சந்தியில் உள்ள ஒரு பிரபலமான கடையின் முன் பிளாற் உடைந்து விழுந்துள்ளது

மயிலிட்டி வீதியில் அடிக்கடி துவக்கு வெடிச் சத்தங்கள் கேட்டன.

சில வீடுகள் குண்டு வைத்துத் தகர்க்கப்படுவதாகவும் - சிலர் சூடுபட்டுக் கிடப்பதாகவும் கூறப்படுகின்றது.

மயிலிட்டி — கட்டுவன் வீதியில் ஒரு லொறி சீருடையினரால் தீமூட்டி எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பலாலி இராணுவ முகாமில் இருந்து மூன்று ஷெல்கள் ஏவப்பட்டு பலாலி—வளலாய் வீதியிலும், அதற்கண்மித்த பகுதிகளிலும் விழுந்து வெடித்துள்ளன.

அநேகமாக போராளிகள் 'சென்றி' நிற்கும் பகுதிகளை நோக்கியே இது ஏவப்பட்டதாம்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து ஏற்கனவே இடம்பெயர்ந்தவர்களைத் தவிர்ந்த - கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான், மயிலிட்டிப் பகுதிகளில் மீதியானோர் அவசர அவசரமாக 'லான்ட் மாஸ்ரர்' உழவு இயந்திரங்கள், மாட்டு வண்டில்கள் மூலம் வீட்டுத் தளபாடங்களுடன், ஏழாலை, சுன்னாகம், அச்சுவேலிப் பக்கங்களை நோக்கி விரைவதைக் காண முடிந்தது.

இப்பகுதிகளில் ஒரே மயான அமைதி நிலவுகின்றது.

இப்பகுதிகளில் நேற்று ஹெலிக்கொப்டரிலிருந்தும் ஷெல் குண்டுகள் வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மில் ஒன்றிற்குள் விழுந்த குண்டு ஒன்றினால் மில்லின் பல பகுதிகள் எரிந்து போயிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## போகும்படி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திக்குள் படுத்திருந்து எழும்பிய சிப்பாய்கள் இருவர் என்னை நிறுத்தினர்.

நான் மிகப் பயந்தவாறு 'ஐயா! என்னை ஒன்றும் செய்துவிடாதீர்கள்' எனக் கத்தினேன். சேட்டுக்குள்ளும், சாரத்துக்குள்ளும் என்ன இருக்கின்றதெனக் கேட்ட அவர்களுக்கு எனது அடையாள காரட்டை காட்டினேன்.

என்னைத் தட்டிப் பரிசோதித்த அவர்கள் நான் போகுமிடத்தைக் கேட்டனர். நான் வேலைக்குப் போவதாகக் கூறினேன். திரும்பி வீடு செல்லவா? அன்றி வேலைக்குப் போகவா? என்று அவர்களைக் கெஞ்சியபடி கேட்டேன். என்னை வேலைக்குப் போகும்படி அவர்கள் கூறினர்.

சைக்கிளில் ஏறித் திரும்பவும் சில தூரம் சென்று கொண்டிருந்த போது பற்றைக்குள் இருந்து எழும்பிய ஒரு சிப்பாய் எதுவும் கேட்காமல் திடீரெனச் சுட்டான். எனது இடதுபக்கத்தில் உதைப்பது போன்ற உணர்வுடன் கீழே விழுந்தேன்.

நான் எழுந்து காயத்தைக் கையால் பொத்தியவாறு கட்டுவனை நோக்கி வந்து சில இளைஞரின் உதவியுடன் வைத்தியசாலைக்கு வந்தேன்

இவ்வாறு அவர் கூறினார்.

## பருத்தித்துறை . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தபாற்கந்தோரும் மூடப்பட்டிருந்தது.

பருத்தித்துறை, பருதடியில் அமைக்கப்பட்ட தற்காலிக மரக்கறிச் சந்தையும் மீன் சந்தையும் கூடவில்லை.

## அரச அதிபர் . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரச அதிபர்களுக்கு விளக்கவே இம்மாநாடு கூட்டப்படுகிறது.

இம்மாநாடு நடைபெறவிருக்கின்ற செய்தி உதயன் ஏப்ரல் முதலாம் திகதி இதழில் வெளியானது தெரிந்ததே.

## மட்டக்களப்பில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் ஆர். எம். ராஜபக்ஷ (வயது 42) அந்த இடத்திலேயே இறந்தார்.

அவரின் மாமனாரான 80 வயது நிரம்பிய விஜயபால ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார்.

அரை மணித்தியாலத்தின் பின்னர் ராஜபக்ஷாவின் மகனான சந்திரபாலா (வயது 28)வின் சடலம் ஹோட்டலுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

அத் தாக்குதல் நடந்த சமயம் ஹோட்டலுக்குள் தேநீர் அருந்திக்கொண்டு இருந்த 2 தமிழர்களும் காயமடைந்தனர்.

அவர்கள் பெயர்கள் வருமாறு;

மாநகரசபை ஊழியர் சோமசுந்தரம் (வயது 30)

இறக்காமத்தைச் சேர்ந்த என். பாக்கியம் (வயது 65)

இத் தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லை.

இரண்டாவது தாக்குதல் சம்பவம் கோட்டை முனைப் பொலீஸ் நிலைய நுழைவாயிலில் நின்ற சென்றி மீது நடத்தப்பட்டது.

சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களே இத் தாக்குதலை நடத்தினராம்.

சென்றிக்கு நின்ற பொலீஸ்காரர் மீது வீசப்பட்ட கிரனேட் தள்ளி வீழ்ந்ததினால் பொலீஸ்காரர் உயிர் தப்பினார்.

இதன் பின்னர் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

வீதிகளில் நடந்துசென்றோரையும் வாகனங்களில் சென்றோரையும் பொலீஸார் தாக்கினராம்.

இதில் மூன்று முஸ்லிம்களும் ஓர் இந்து மதகுருவும் காயமடைந்தனர். அவர்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்கள் பெயர் வருமாறு;

1. காத்தான்குடியைச் சேர்ந்த பல்கிஸ் உம்மா, வயது 40.
2. மட்டுநகர்- திருமலை வீதி, வாசியான மீராசாகிப் வயது 32.
3. தாமரைக்கேணியைச் சேர்ந்த சந்திரசேகர ஐயர், வயது 54.
4. பாம் ஹவுஸைச் சேர்ந்த எம். ஏ. ஜவாட், வயது 35.

## முகம்மது . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிக்கையை கையளித்தார்.

போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொண்ட பின்னர்தான் யாழ் - கொழும்பு ரயில் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்ற விடயம் குறித்து அமைச்சர் [illegible] லலித் அத்துலத்முதலியுடன் பேசி முடிவு செய்வார்.

நீத்தார் பட்டியல்

### கணபதிப்பிள்ளை கண்மணி

கணபதிப்பிள்ளை கண்மணி 01-04-86இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், கதிரவேலு (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்), காலஞ்சென்ற பகாராசா, காலஞ்சென்ற தர்மலிங்கம், தம்பிப்பிள்ளை, சரஸ்வதி, சோதிநாதன் (உரிமையாளர் 'சோதி ஸ்டோர்ஸ்') சந்தானலக்ஷ்மி ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கராசா, காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (02-04 86) முற்பகல் 9 மணிக்கு 133ம் இலக்கம், கண்டி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து சித்துப்பாத்தி மயானத்திற்கு தகனக்கிரிகைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. கதிரவேலு

### சிதம்பரப்பிள்ளை துரைசிங்கம் (செட்டி)

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சிதம்பரப்பிள்ளை துரைசிங்கம் 1-4-86ல் மயிலிட்டியில் அகால மரணமானார். இவர் பவளரத்தினத்தின் அன்புக் கணவரும், கோணேஸ்வரி, கோணேஸ்வரன், சிவாநந்தினி ஆகியோரின் தந்தையும் வீரசிங்கம், செல்லத்துரை, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் செல்வராணியின் மாமனாரும் புஸ்பமாலா, கேதீஸ்வரன், ஈஸ்வரி, யெகசீலன், தயாபரன் ஆகியோரின் சிறிய தந்தையும், இராசேந்திரம், வியாழம்மா, சிவரத்தினம் ஆகியோரின் மருமகனும் விசயராசா (இ மி சபை) மாணிக்கவாசகர், தாமோதரம்பிள்ளை, சின்னராசா, குணராசா, சந்திரா (இ மி. சபை) யாழ்ப்பாணம் கனகமுத்து, பத்மாதேவி, தசவாரி, செல்வராசா, மல்லிகாதேவி, சிவராசா, குணவதி, தசபஞ்சாட்சரி, புஸ்பராணி, கந்தையா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 2-4-86 காலை 10-30 மணியளவில் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி,
நீர்வேலி.

தகவல்
மனைவி
பிள்ளைகள்

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்; த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்; 15, 2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 02-04-1986
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number QJ60 N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org